பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நமநாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ, எம்.டி.

மலர்: 15] சென்னை: ஆடி 3உ (19—7—67) புதன் ★ வெளியூர்: ஆடி 4உ (20—7—67) வியாழன் [இதழ்: 30

தேர்தல் செலவில் மத்திய அரசு பங்கு

டில்லிக்குத் தமிழக அரசு கோரிக்கை

அமைச்சர் கோவிந்த மேனனுக்கு அண்ணா மடல்

புதுடில்லி, சூலை 17—

"கடந்த பொதுத்தேர்தலின்போது, தமிழக அரசுக்கு ஏற்பட்ட செலவுகள் அனைத்திலும் பாதியை மத்திய அரசு ஏற்கவேண்டும்" என்று கோரி, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. பனம்பள்ளி கோவிந்த மேனனுக்கு ஓர் கடிதம் எழுதியிருப்பதாக அறியப்படுகிறது.

பொதுத் தேர்தலின்போது, காவல் துறையினருக்கு, கூடுதலான நேரம் பணியாற்றியதற்காகக் கொடுக்கப்பட்ட படித்தொகை, மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அமர்த்திக் கொண்டதில் ஏற்பட்ட செலவு, பெட்ரோல் ஆகியவற்றிற்காகத் தமிழக அரசு ரூ 25 இலட்சம் வரை செலவிட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

பொதுவாக, பொதுத்தேர்தல் நடத்துவதற்கு ஆகும் செலவின் ஒரு பாதியை மட்டும்தான் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது; மேற்சொன்ன மூன்று வகையான செலவுகளையும் ஏற்றுக் கொள்ளவதில்லை.

எனவேதான், 'இந்தக் செலவிலும் மத்திய அரசு மாநில அரசுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்' என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் வற்புறுத்தியுள்ளார்.

(4-ம் பத்தித் தொடர்ச்சி)

இந்த வாழ்த்து முழக்கம் மூன்று முறை முழங்கியது!

தமிழகச் சட்டமன்ற வரலாற்றிலேயே இது புதுமை நிகழ்ச்சியாகும்.

"ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதலே பல வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளை உருவாக்கி வரும் அண்ணா அமைச்சரவை, இன்னும் எத்துணை எத்துணைச் சிறப்புக்களைத் தமிழகத்திற்கு வழங்க இருக்கின்றதோ" எனப் பூரிப்புடனும், புளகாங்கிதமுடனும் தமிழ் நெஞ்சங்களெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன!

இலவசக் கல்வி -- ஒரு சமூக நீதி!

சென்னை, சூலை 18—

அண்ணா:—"பி. யு. சி. வகுப்பில் எல்லா என். ஜி. ஓ.-க்களின் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுவதுபோல, ரூ. 400-க்குக் குறைவாக ஊதியம் பெறும் உள்ளாட்சிமன்ற ஊழியர்கள், உதவி பெறும் ஆரம்ப—உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஆர். வெங்கட்ராமன்:—"பாக்கி இருப்பவர்கள் கொஞ்சம் பேர் தானே? அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கலாமே;"

அண்ணா:—"இது பணச் செலவுப் பிரச்சினை என்பதைவிட, சமூகப் பிரச்சினையாகும்; 'கட்டணம் செலுத்தச் சக்தியுள்ளவர்களிடம் வாங்கவேண்டும்' என்பதே அரசின் கொள்கை! இதுவே சமூக நீதி!"

—(சட்டமன்ற மேலவையில்)

கோட்டயம், சூலை 19—

மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதில், ஏகிய மாநிலங்களை விட நேரளம் முன்னணியில் இருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சட்டம்--ஒழுங்கு காத்தலில் முந்திய அரசைவிடச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறோம்

எதிர்க் கட்சிக் குற்றச்சாட்டுக்கு அண்ணா தரும் பதில்

சென்னை, சூலை 18—

"சட்டம், ஒழங்கை நிலைநாட்ட இந்த அரசு தவறிவிட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார்.

"இப்போது எதிர்க் கட்சியாக உள்ள கட்சி ஆளும் கட்சியாக இருந்தபோது—இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது சட்டத்தையும், அமைதியையும் காப்பாற்றவில்லை என்பதைக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"சட்டம், ஒழங்கு சீர்குலேந்தால் அரசாங்கம் பலவீனமாயிருப்பதாகப் பொருளல்ல; 'சில குறிப்பிட்ட சக்திகள் தலையிடுகின்றன' என்றுதான் அர்த்தம்!

"சில சமூக விரோதிகள், தவறான காரியங்களில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. அப்படிப்பட்ட புகார் வந்த 24 மணி நேரத்துக்குள் 30 பேர் கைது செய்யப்பட்டு, அந்தப் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது! ஆகையால், இந்த அரசு சட்டத்தையும் ஒழங்கையும் பாதுகாக்கத் தவறிவிட்டதாகக் கூறுவது சரியல்ல!

"அரசியலின் அடிமட்டத்தில் உள்ளவர்களிடையே ஏற்பட்ட எரிச்சலை அகற்ற, அண்டன் இந்த அரசு நடந்துகொண்டது; அதே சமயத்தில், எதிர்க் கட்சித் தலைவரின் கட்சியில் உள்ள சிலர் பேசிய பேச்சுக்களும், எழுதிய எழுத்துக்களும் வேறு முறையில் இருந்து வந்திருக்கின்றன!

"இந்தி திணிக்கப்படுவதாக இருந்த சனவரி 26-ந்தேதியை துக்க தினமாக கொண்டாடியபோது, தி.மு. கழகக் கொடிகளை காங்கிரசுத் தொண்டர்கள் பிடுங்கி எரிந்ததையும், நான் பொதுக்கூட்டத்தில் பேசச் செய்யாமல் தடுக்கப்போவதாக ஒரு காங்கிரசுக்காரர் கூறியதையும் நினைவுபடுத்துகிறேன்.

"இந்தி எதிர்ப்பு இயக்க நாளில் காங்கிரசு அரசு சட்டத்தையும் ஒழங்கையும் பாதுகாத்தலைவிடச் சிறப்பாகவே கடந்த 2, 3 மாதங்களில் தி. மு. க. அரசு பாதுகாத்து வருகிறது.

—(சட்டமன்ற மேலவையில் நிதி ஒதுக்கீடும சோதா மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில்)

தமிழக வரலாற்றில் ஒரு பொன்னாள்!

சென்னை, சூலை 18—

தமிழகச் சட்டமன்ற வரவு-செலவுக் கூட்டத் தொடரின் இறுதி நாளான இன்று தமிழக வரலாற்றிலேயே சிறப்புமிக்க இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றன; ஒன்று—'தமிழ்நாடு' பெயர் சூட்டக் கோரும் தீர்மானம் நிறைவேறியது; மற்றொன்று—சுயமரியாதைத் திருமண மசோதா கொண்டுவரப்படும் பொறுக்குக் குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

இந்த இரு நிகழ்ச்சிகளும், தமிழ் மக்களால் நீண்ட நெடுங்காலமாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டு வந்தவையாரும்.

'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக் கோரும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதும், முதலமைச்சர் அண்ணா அவர்கள்,

"எழுச்சியும் மகிழ்ச்சியும் மிக்க இருநாளான இன்று இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைக் கொண்டாடும்முகத்தான், 'தமிழ்நாடு' என்று நான் சொல்வேன்; அவையில் உள்ள அனைவரும், 'வாழ்க' என்று முழங்க வேண்டும்; இதற்கு அவைத் தலைவரின் ஒப்புதல் வேண்டுகிறேன்"

என்றார்.

அவைத் தலைவரும் தலையசைத்துத் தம் இசைவினைத் தெரிவித்தார்.

உடன் அண்ணா அவர்கள், 'தமிழ்நாடு' என, அனைவரும், 'வாழ்க' என எதிரொலிக்க—

(3-ம் பத்தி பார்க்க)

தொழில் தகராறுகள் அன்றும் இன்றும்!

சென்னை, சூலை 18—

"தொழில் துறை அமைதியைப் பாதுகாப்பதில் தொழிற்சங்கத் தலைவராயிருந்த எதிர்க் கட்சித் தலைவரைப்போல அவ்வளவு கவர்ச்சியாக இல்லாவிடினும், நான் கடந்த 2, 3 மாதங்களாகத் தொழில் தகராறுகளை வெற்றிகரமாகப் பேசித் தீர்த்து வைத்திருக்கிறேன்.

"காங்கிரசு ஆட்சியின்போது வேலை நிறுத்தங்கள்—கதவடைப்புகள்—தொழிலாளர் மீது தடியடிப் பிரயோகங்கள் நடந்ததில்லையா என்றும் கேட்க விரும்புகிறேன்; இருப்பினும், எதிர்க் கட்சித் தலைவர் கூறிய யோசனையை இன்றவரை பின்பற்றி நடப்பேன்."

--முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்ற மேலவையில்)

மூடப்பட்ட ஆலை திறக்கப்படுகிறது

கோவை, சூலை 18—

"நிதி நெருக்டி காரணமாக 169 நாட்கள் மூடப்பட்டிருந்த சோமசுந்தரம் ஆலை, சூலை 21-ம் நாள் முதல் மீண்டும் வழக்கம் போல் வேலை செய்யத் துவங்கும்" என்று ஆலை நிர்வாகிகள் கூறினர்.

1,400 பேர் பணியாற்றும் இவ்வாலை, பழைய சம்பளம் தொடர்பாக தொழிலாளர் சங்கத் தலைவர்களுக்கும—நிர்வாகிகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டதால், மீண்டும் திறக்கப்படுகிறது.

நெய்வேலித்தொழிலாளர் தகராறில் உடன்பாடு

அண்ணா--மாதவன் தலையிட்டால் வேலை நிறுத்தம் நின்றது

சென்னை, சூலை 19—

திங்கள் இரவு 10 மணி முதல் வேலை நிறுத்தம் செய்திருந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமிழக அரசின் தலையீட்டால் வேலைக்குத் திரும்பினர்.

முதலமைச்சர் அண்ணாவும் தொழிலாளர் நல அமைச்சர் சே. மாதவனும் தலையிட்டதன்பேரில் தொழிற்சங்கங்களுக்கும்—நிர்வாகத்தினருக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டது.

மாநில அரசு தெரிவித்த திட்டத்தில், தொழிலாளர்களின் 18 கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

15,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால் அனல்மின் நிலையம், பூரியா உர ஆலை, கரிச்சட்டி ஆலை, ஈரங்கங்கள் ஆகியவற்றில் வழக்கமாக நடைபெறும் வேலை பாதிக்கப்பட்டது.

சுயமரியாதைத் திருமணச் சட்ட மசோதா

கனவு நனவாகிறது!

சென்னை, சூலை 18—

"நாங்கள் இதைச் சாமானிய சீர்திருத்தமாகக் கருதவில்லை; 'இப்படி ஒரு சட்டத்தை நம்மால் கொண்டுவர முடியுமா' என்று ஏங்கிய காலமும் ஒன்று உண்டு! அந்தக் கனவு இன்று நனவாகிறது!

"இதைச் சட்டமாக ஆக்குவது பற்றி முன்பு பதறியவர்கள்—பயந்தவர்கள் எல்லாம்கூட, படிப்படியாகத் தெளிந்து வந்திருக்கிறார்கள்!

"இம்மாதிரியான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்றுதான் மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து இங்கு அனுப்பியிருக்கிறார்கள். மேலும், இச்சட்டத்தின் காரணமாக, இனிமேல் எவரும் இம்முறைப்படிதான் திருமணம் செய்யவேண்டுமென்று — சர்வாதிகார நாடுகளைப்போல் — உத்தரவிடப்பட்டவில்லை!

"சீர்திருத்தத் திருமணங்களையும் செல்லத்தக்க—அனுமதிக்கத் தக்கதாகச் செய்யவே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது."

---முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்றத்தில்)

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எல்எல்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 3 (19—7—67) புதன்

'எழுச்சி நாள்'—
வெற்றி நாளாகட்டும்!

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கும் முடிவில், அதற்கான பணி துவங்கப்பட்டுச் செயலாற்றப் பட்டுவருகிறது. இந்த நிலையில், ஆழ்கடல் துறைமுகமாகுவது என்ற முடிவைக் கைவிட்டுவிடு, மீன் பிடித் துறைமுகமாக ஆக்கினால் போதுமென்ற நினைப்பு, இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்திய அரசாங்கம் கொண்டிருக்கின்ற இப்புதிய நினைப்புக் குரிய பொருள் ஒன்றே ஒன்றுதான்; அதாவது, ஆழ்கடல் துறை முகமாக்குவதற்காக, இதுவரை அங்கு செய்திருக்கின்ற பணிக்கு இறுதியாக முற்றுப்புள்ளி வைத்துவிடுவது என்பதே ஆகும்.

இத்திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வைப்பதனால், கிடைக்கக்கூடியது இழப்பாகத்தான் இருந்திடக்கூடும் என்றும், விளைவு எதுவாக இருந்திட்டாலும், இத்திட்டத்திற்குத் தேவைப் படும் தொகையைத் தந்துதவுவதற்குத் தம்மிடத்தில் போதிய நிதி வசதி இல்லை என்றும் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறி யுள்ளார்.

நிதி அமைச்சரின் பிடிவாதம் இப்படி இருந்திட்டபோதிலும், இத்திட்டத்தை நிறைவேற்றி வைக்கத் தேவைப்படக்கூடிய அந் நியச் செலாவணியை, ஜப்பான் நாடு கொடுத்துதவ முன்வந்திருப்ப தாகத் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார். இத்தகவலைக் கூறிய முதலமைச்சர், திட்டத்திற்காகத் தான் உதவக் கூடிய அந்நியச் செலாவணிக்கு ஈடாகத் தூத்துக்குடியில் விளை கின்ற உப்பை வாங்கிக்கொள்ளுவதாக ஜப்பான் விருப்பம் தெரிவித் திருப்பதாகவும் தமிழக முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இதனால், மேற்படி திட்டத்துக்குத் தேவைப்படக்கூடிய அந்நியச் செலாவணிக்கு எங்கே போவது — எந்த நாட்டிடம் கேட்டுப் பெறுவது என்ற கவலை, நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய்க்கு இருந்திட நியாயமில்லை. திட்டத்துக்குத் தேவைப்படக் கூடிய அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கான உடன்பாட்டை, ஜப்பானுடன் செய்துகொள்ளும் 'பெருஞ்சுமை'யைத் தாங்கிக் கொள்ளவேண்டிய ஒன்றுதான் நிதியமைச்சரின் பொறுப்பாகிறது.

தூத்துக்குடித் திட்டத்துக்காக ஜப்பானிடம் கடனாகப் பெறு கின்ற அந்நியச் செலாவணியை எப்படித் திருப்பிக் கொடுப்பது என்ற கவலையும், நிதியமைச்சருக்கு இருந்திட நியாயமில்லை. அக் கடனையும், தூத்துக்குடி உப்பாகக் கொடுத்து சில ஆண்டுக் காலத்தில் அடைத்துவிடலாம்.

இந்தத் தகவல், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய்க்குத் தெரியாதென்பதுமில்லை—விளங்காது என்பதுமில்லை. இவ்வேற் பாட்டை ஜப்பான் நாட்டுடன் செய்துகொள்ளுவது இலகுவானது என்பதும் நிதியமைச்சருக்குத் தெரியும்.

தூத்துக்குடித் திட்டத்துக்கு ஜப்பான் உதவி செய்ய முன்வரு வதை, இந்திய அரசின் சார்பில் நிதியமைச்சர் ஏற்றுக்கொண்டு விடும் பட்சத்தில், இத்திட்டத்திற்காக மேலும் செலவாகக்கூடிய தொகை குறைவானதாகத்தான் இருந்திடும். இக்குறைந்த தொகையை ஒதுக்குவதற்கு, நிதியமைச்சர் மிரளத் தேவையில்லை.

தூத்துக்குடித் திட்டத்துக்கு ஜப்பான் உதவி செய்ய விருப்பம் தெரிவித்திருக்கிறது என்ற செய்தியைச் சட்ட மன்றத்தில் தமிழக முதலமைச்சர் அறிவித்திருப்பதைக் கண்டதும், மேற்படி திட்டத்தை நிறைவேற்றி வைக்க நிதி வசதி இல்லை—திட்டம் இலாபமளிக்கக்கூடியதல்ல—எனத் திரும்பத் திரும்பத் தாம் கூறிவந்திருப்பதைக் கைவிட்டுவிட்டு, 'திட் டத்தை நிறைவேற்றிவைக்க நிதியுதவி செய்யவேண்டும்' என்ற முடிவுக்குத்தான் நிதியமைச்சராக யார் இருந்தாலும் வந்திருப்பார் கள். மொரார்ஜி தேசாயும் அம்முடிவுக்குத்தான் வந்திருப்பார் என்று எவரும் தீர்மானித்துக்கொள்ளுவர்.

ஆனால், மற்றவர்கள் தீர்மானித்துக் கொள்ளக்கூடியதைப் போல், மொரார்ஜி தேசாய், தமது போக்கை மாற்றிக்கொள்ள வில்லை. பழைய பிடிவாதத்தைதான் அவர் உடும்புப்பிடியாகப் பற்றிக்கொண்டிருக்கின்றார்.

தமது பிடிவாதத்துக்கு, இதுவரை கூறப்படாத புதிய கார ணத்தை, தேசாய் இப்பொழுது வெளியிட்டிருக்கின்றார்; அது, இது:

> "முறைப்படி தூத்துக்குடித் திட்டத்துக்கு இன்னும் பூர்வாங்கச் சம்மதமோ ஒப்புதலோ (இந்திய அரசு) தரவில்லை"

இத்தகவலை, இப்பொழுதுதான் முதன் முதலாக நிதியமைச்சர் வெளியிட்டிருக்கிறார். இத்தகவலைத் தெரிவித்திருப்பவர் நிதி அமைச் சர் ஒருவர் மட்டுந்தான். அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கின்ற வேறு எந்த ஓர் அமைச்சருக்கும், மேற்படி தகவல் தெரியவே தெரி யாது. எனவே, இத்தகவல் எந்த அளவுக்கு உண்மையானது என்பது, இனித்தான் தெரியவேண்டும்.

நிதியமைச்சர் தேசாய் வெளியிட்டிருப்பதுபோல், தூத்துக் குடித் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் பூர்வாங்க ஒப்புதலை முறைப்படி தரவில்லை என்றே வைத்துக்கொள்ளுவோம். இதைக் காட்டி, தூத்துக்குடித் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வைப்பதை இடையிலேயே நிறுத்திவிட தேசாய் விரும்புவது நியாய மானதல்ல.

துவக்கத்தில் தராது விடுபட்டுப்போன பூர்வாங்க ஒப்புதலை இப்பொழுது தந்து, திட்டத்தை நிறைவேற்றிவைக்க நிதியமைச்சர் துணியவேண்டும். இதுதான் தமிழ் மக்கள் அனைவரின் விருப்பமும் கோரிக்கையுமாகும்.

இக்கோரிக்கையை வலியுறுத்தும் விழுமிய இலட்சியத்தைக் கொண்டிருப்பதுதான் 'எழுச்சி நாள்'.

இக்கோரிக்கை, தமிழ் மக்கள் அனைவருடையவும் பொதுக் கோரிக்கையாகும்.

இது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள கழகம் மட்டுமே கோரக் கூடிய தனிக் கோரிக்கை அல்ல.

காங்கிரசுக் கட்சியும், 'இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண் டும்' என விரும்புகிறது.

அரசியல் கட்சி வேற்றுமைகள் அனைத்தையும் கடந்து, தமிழ் மக்களின் பொதுக் கோரிக்கையாக இருந்துவருகின்ற தூத்துக் குடித் திட்டத்தை நிறைவேற்றிவைப்பதில் வெற்றி காண, 'எழுச்சி நாள்' கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தவேண்டும்.

'எழுச்சி நாள்', வெற்றி நாளாக வேண்டும்! தமிழ் மக்கள் அனைவரும், கட்சி வேற்றுமைகளை மறந்து—ஒரே குரலில்—தூத் துக்குடித் துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றிவைக்க இந்திய அரசைக் கோருவோமாக!

எழுச்சி நாள்—வெற்றி நாளாகட்டும்!

—கா. சு.

நம் நாடு

திட்டக் குழு சீரமைப்பு

நிர்வாகப் பணிகள் குழுவிற்கு இல்லை

'திட்ட அமைச்சர்' பதவி இனி கிடையாது

புதுடில்லி, சூலை 17—

"திட்டங்களை உருவாக்குவதும், திட்டங்களின் பலன் மதிப்பிடு வதும்தான் திட்டக் குழுவின் பணியாக இருக்கவேண்டும்"

என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரைத்திருக்கிறது. அரசு, பொதுவாக ஒப்புக்கொண்டதாகத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் தெரி வித்தார்.

திட்டக் குழுவுக்கு நிர்வாக வேலை எதுவும் இருக்கக்கூடாது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது; 'திட்ட அமைச்சர்' என்ற பதவி யும் ஒழிகிறது.

திட்டக் குழு, தேசீய வளர்ச்சிக் குழு ஆகியவற்றின் அமைப்புப்பற் றிய அரசின் முடிவுகளைத் தலைமை யமைச்சர் அறிவித்தார்.

திட்டமிடுதல் தொடர்பான பிரச் சினைகளை இனி மத்திய அரசில் அங்காத்த துறை அமைச்சர்களே கவனித்துக்கொள்வார்கள்.

மாநில மட்டத்தில் திட்டமிடுதலை மத்திய அரசும், மாநில அரசு களும் அவ்வப்போது பேச்சு வார்த்தைகள் நடத்தித் தீர்த்துக் கொள்ளும்.

அறிஞர் அண்ணா உருவச் சிலை

செப். 15-ல் திறப்பு விழா

"அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப். 15-ம் நாளன்று காஞ்சிபுரம் நகராட்சிமன்றத்தின் முன்புள்ள புல் வெளியில் அறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலை திறந்துவைக்கப்படும்"

என்று காஞ்சி நகராட்சித் தலைவர் ஏ. கே. தங்கவேலர் தெரிவித் துள்ளார்.

காஞ்சி நகராட்சி

அமைச்சர்களுக்கு வரவேற்பு

காஞ்சிபுரம், சூலை 15—

தமிழக உணவு அமைச்சர் கே.ஏ. மதியழகன் அவர்களுக்கும், கலத்துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களுக்கும் காஞ்சி நகராட்சி வரவேற்பளித்தது.

அமைச்சர்களுக்கு, நகராட்சித் தலைவர் ஏ. கே. தங்கவேலர், வர வேற்பேற்று படித்தளித்தார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அமைச்சர்கள் பேசினார்.

'காஞ்சிபுரம் மருத்துவமனையில் வசதிகள் செய்துகொடுக்கப்படும்' என்று அமைச்சர் சாதிக்பாட்சா கூறினார்.

விவசாய வருமான வரிச் சட்டம்

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

"விவசாய வருமான வரிச் சட்டத் திருத்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டும்" என்று சட்டமன் றத்தில் வருவாய்த்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் பிரேரித் தார்; இதன்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும், அரசுக்கு வருமானம் வரவேண்டும் என் றும் திருத்தங்கள் செய்யப்பட விருக்கின்றன.

புஞ்சைக்கு வரி தள்ளுபடி செய்து விட்டு இதன் மூலம் வருமானம் பெறுவதாகக் கூறப்பட்டது.

புஞ்சைக்கு மட்டுமல்ல-நஞ்சைக் கும் வரிச் சலுகை தரவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார் கள்; 'அதுவும் கவனிக்கப்படும்' என்று அரசாங்கத்தரப்பில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

நிலவுடைமையாளர்களுக்கு இன் னும் பல சலுகைகள் தரப்பட்டி ருக்கின்றன; ஆகையால், புஞ் சைக்கு நிலவரியைத் தள்ளுபடி செய்துவிட்டு வேறு வகையில் வரியைத் தேடிக்கொள்கிறோ மென்ற கருத்து தேவையில்லை.

விவசாய வருமான வரியின் மூலம் ரூ. 25 கோடி வரும் என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினார்; 'அதில் அரசுக்கு ரூ. 10 கோடி தந்துவிட்டு, ரூ. 15 கோடியை வைத்துக்கொள்ள லாம்' என்று அவரிடம் சொன் னேன்; ஆனால், சட்டம் அதற்கு இடம் தராது; விவசாய வருமான வரியின் மூலம் சில இலட்சம் ரூபாய்கள்தான் வரும் என்று கருதுகிறோம்.

நிலவுடைமை உச்சவரம்புச் சட் டம் சரியாக நிர்வாகம் செய்யப் படுமானால், விவசாய வருமா னத்தை அதிகப் போக்கிட மிருந்து பெற முடியும்.

உச்சவரம்புச் சட்டம் சரியாக நிறைவேற்றப்பட்டால், விவ சாய வருமான வரி பற்றிப் பயப்படத்தேவையில்லை. அதற் குப் பயப்படுகிறார்கள் எனறால், நிலவுடைமை உச்சவரம்புச் சட் டத்தை ஏமாற்றுகிறார்கள் என்று அர்த்தம்!

விவசாய வருமான வரிச் சட்டம் என்பது, நிலவுடைமை உச்ச வரம்புச் சட்டத்தில் ஏற்பட் டிருக்கின்ற ஓட்டைகளை அடைப்பது!

உச்சவரம்புச் சட்டத்தில் ஓட்டை கள் இல்லையென்றால், விவசாய வருமான வரிச் சட்டம் பயனற் றுப் போய்விடும்!

"உணவுப் பயிர்களுக்குத்தான் சலுகை வேண்டும்; பணப் பயிர்களுக்கு வேண்டியதில்லை" என்று சொன்ன கருத்தை மிகவும் நன்றியோடு வரவேற் கிறேன்.

பொதுவாக, உணவுப் பயிர் களில் கிடைப்பதைவிடப் பணப் பயிர்களில்தான் விவசாயி களுக்கு வருமானம் கிடைக்கும்.

பணப் பயிர்கள் அடியோடு கூடாது என்பதும் அரசின் கருத்தல்ல; அதில் அதிகமாக வருமானம் வரும்பொழுது, அதி லிருந்து ஒரு பகுதியை அர சுக்குக் கொடுக்கவேண்டியது சனநாயகத்தின் பண்பாகும்.

"இப்பொழுது கிடைப்பதை விடக் கூடுதலான வருவாய் வர வேண்டும்" என்ற அடிப்படை யில், பொறுக்குக் குழு உறுப் பினர்கள் நடந்துகொள்ளவேண் டும் என்று விரும்புகிறேன்."

திரு. பொன்னப்ப நாடார் (காங் கிரசு) :—"திரு வி தா ங் கூர் — கொச்சியில் விவசாய வருமான் வரி சம்பந்தமான முதல் கட்டம் ரூ. 3,000 என்று சட்டம் இருக் கிறது; இந்தச் சட்டத்தில் முதல் கட்டம், ரூ. 4,000 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியில் திருவிதாங் கூர் சட்டம் அமுலில் இருக் கிறது; இப்போது இந்தச் சட் டத்தை அங்கே விரிவுபடுத்தும் எண்ணம் இருக்கிறதா?"

முதலமைச்சர் அண்ணா :—"கன் னியாகுமரி தமிழகத்தோடு சேர்ந்து நாளிலிருந்து அவர்களி டத்தில் சாமர்த்தியமான மனப் பான்மை இருக்கிறது. எந்தெந் தச் சட்டங்கள் அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்றனவோ அவை இருக்கட்டும் என்பதும், எவை எவை தங்களுக்குச் சாதகமாக இல்லையோ அவை வேண்டாம் என்பதும் அவர்கள் சாமர்த்தியம். ஆனால், எந்தெந் தச் சட்டங்கள்மூலம் வருமா னத்தைப் பெருக்கிக்கொள்ள முடியுமோ அந்தச் சட்டங்கள் அங்கு கொண்டுவரப்படும்."

காங்கிரசு அரசு விதித்த உபரி வரி

ரத்து செய்யும் மசோதா நிறைவேறியது

சென்னை, சூலை 17—

நிலவரி, தண்ணீர் நீர்வை உபரி வரியை ரத்து செய்வதற்கான மசோதா சட்டமன்றத்தில் நிறைவேறியது.

"தண்ணீர்த் நீர்வைமீது முந் திய காங்கிரசு அரசு விதித்தி ருந்த 25 சதவீத உபரி வரி இம்மசோதாநிறைவேறியதன் மூலம் நிக்கப்படும்; இதனால் ஏழை விவசயிகளும், ஏழை நில உடைமையாளர்களும் பய னடையவார்கள்"

என்று அமைச்சர் கே. ஏ. மதியழ கன் கூறினார்.

தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி

சென்னை, சூலை 17—

"வட சென்னியில் திரு. வி. க. நகர், சர்மா நகர், செம்பியம் காலனி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்காக 1052 வீடுகளும், அம்பத்தூரில் 99 வீடுகளும் சுமார் ரூ. 52 இலட் சம் செலவில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

"தென் சென்னையில் ரூ. 6,20,88,14 செலவில் 5436 வீடு கள் கட்டப்பட்டுள்ளன"

என்று, தொழிலாளர் அமைச்சர் செ. மாதவன், மேலவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

புதுக்கோட்டை பகுதியில் விதைப் பண்ணை

முதலமைச்சர் அண்ணா பார்வையிடுவார்

திருச்சி, சூலை 18—

சூலை 24-ல் முதலமைச்சர் அண்ணா அவர்கள் புதுக்கோட் டைக்கு அருகிலுள்ள குடுயியான் மலைக்கு வருகை தரும்போது, வய லோகம் காட்டுப் பகுதியில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்துப் படவிருக்கும் விதைப் பண்ணைக் கான நிலப் பகுதியைப் பார்வை யிடுவார்.

தமிழ் மன்னர்கள் வகுத்த வழியில் இன்றைய ஆட்சி முறை

ஊர் நலனில் மக்களுக்கு இருந்த அக்கறை குறைந்ததேன்?

வேற்றுமையின்றி ஒன்றுபட்டால் நல்ல காரியங்களைச் செய்ய இயலும்

மாவட்ட நிர்வாகச் சீரமைப்புக் குறித்து முதலமைச்சர் அண்ணா கருத்துரை

தமிழகச் சட்டமன்றத்தில், மாவட்ட நிர்வாகத் துறை மானியக் கோரிக்கை மீது 12—7—67 அன்று நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது:—

மாவட்ட நிர்வாகம் சரிவர இயங்க வழி

"உறுப்பினர்கள் எல்லாம் ஒரு முக்கியமான கருத்தைப்பற்றிக் கூறும்போது, 'எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் — யார் ஆட்சியில் இருந்தாலும், மக்களுக்குப் பலன் கிடைக்க வேண்டுமென்கும், கிராமத்தின் அடித்தளத்திலுள்ள நிர்வாகம் நல்ல முறையில் இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள்.

பொதுமக்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுத்தால்தான் அரசியலுடைய திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்படும்; அங்கு அரசுக்கும் நல்ல பெயர் கிடைக்கும்.

எப்படி மனித உடலில் நரம்புகள் —இரத்தக் குழாய்கள் சரியான முறையில் இருந்தாலுதான், அந்த மனித உடல் செய்ய வேண்டிய காரியங்களைச் செவ்வனே செய்யமுடியுமோ அதுபோல், கிராமப்புறங்கள்—பிர்க்காக்கள் — தாலுகாக்கள்—மாவட்டங்கள் என்ற வரிசைக் கிரமமான முறையில் அமைந்திருக்கின்ற மாவட்ட நிர்வாகம், இரத்தக் குழாய்கள் — நரம்புகளைப்போல சரியான முறையில் இயங்குவதற்கு வழி ஏற்படும்.

மாவட்ட நிர்வாகம் சரியான முறையில் இயங்கினாலொழிய, அரசு சில திட்டங்களைப் போடுவதால் மட்டும் நன்மை கிடைத்துவிட முடியாது என்பதை உறுப்பினர்கள் உணர்ந்திருப்பதை நான், மிக மிக முக்கியத்துவம் உள்ளதாகக் கருதுகிறேன்.

திருத்தியமைப்பதற்கு நாம் மேற்கொள்ளக்கூடிய காரியங்கள் ஆழ்ந்து சிந்தித்துச் செய்யப்படவேண்டிய காரியங்கள் ஆகும்.

சோழ மன்னர்கள் அமைப்பு முறை தவறு?

ஒரு இடத்திலே கூடுமக்கு அதிருப்தி தோன்றியவுடன், 'இதை உடனடியாக மாற்ற வேண்டும்' என்ற அவசரமான முடிவை எடுத்து மாற்றிவிட்ட பிறகு— அதற்குப் பிறகு, 'முன்னுமே இருந்ததே பரவாயில்லைபோலிருக்கிறதே' என்று சொல்லக் கூடிய நிலைக்கு நாம் வந்துவிடக் கூடாது.

ஆனால், அவசரப்பட்டுச் செய்யக் கூடிய திருத்தங்கள் இதில் இல்லை.

கனம் உறுப்பினர்கள் சொன்னவற்றிலே ஒரு கருத்து வேறுபாடு எனக்கு உண்டு; 'கிராமங்கள்—பிர்க்காக்கள்— தாலுகாக்கள் — மாவட்டங்கள் என்று இருக்கின்ற இந்த அமைப்பு முறையே வெள்ளையர் ஏற்படுத்திவிட்டுப் போனது; ஆகையினால், இன்றையத்தினம் சரியாக நடைபெறுது; அதை நாம் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை' என்று சொல்லுவது உண்மையல்ல.

இந்தியாவைப் பொறுத்த வரையில், நாம் இப்பொழுது இதிலே கவனம் செலுத்தத் தேவை இல்லை எனபதால்—தமிழகத்தை எடுத்துக்கொண்டால் — சோழ மன்னர்களால் அமைக்கப்பட்டிருந்த அமைப்புத்தான் இப்பொழுதும் ஒருவகையிலே அமுலில் இருப்பதாக நாம் கருதிக் கொள்ளவேண்டும்.

சோழ மன்னர்கள், நாட்டின் நிர்வாகத்திற்கு அடிப்படையாகப் பல ஊர்களை அமைத்துக் கொண்டு அந்த ஊர்களையெல்லாம் ஒருவாறு இணைத்து 'கூற்றங்கள்' அமைத்தார்கள்; பல கூற்றங்களை இணைத்து 'கோட்டங்கள்' அமைத்தார்கள்; கோட்டங்களை ஒன்றுபடுத்திப் பல 'மண்டலங்கள்' ஏற்படுத்தினார்கள்; அப்படிப்பட்ட மண்டலங்களையெல்லாம் இணைத்துத்தான் 'நாடு' என்று அமைத்து நிர்வாகத்தை நடத்தினார்கள்.

அதனாலேதான், தமிழகத்திலே தமிழ் மன்னர்களுடைய ஆட்சி பொதுவாக சிறப்புடையதாக இருந்தாலும், சோழ மன்னர்களுடைய ஆட்சிதான் மிகச் சிறப்புடையதாக இருந்தது.

அவர்கள், 'நிர்வாக வசதிகளுக்கேற்ற முறையில் பல்வேறு கட்டங்களாகப் பிரித்து, ஒரு கட்டத்திற்கும்—இன்னொரு கட்டத்திற்கும் இணைப்பு ஏற்படுத்தி, அந்த இணைப்பு ஒழுங்காக இருக்குமபடி பார்த்துக்கொண்டதால் அவர்களுடைய ஆட்சி சிறந்து விளங்கியது' என்று வரலாற்று ஆசிரியர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள்.

நிர்வாகக் கோட்டங்களைப் பல்வேறு வகையாகப் பிரித்ததுமட்டுமல்ல—பல்வேறு காரியங்களைச் செய்வதற்காகப் பல வாரியங்கள் அல்லது குழுக்கள் ஏற்படுத்தியிருந்தார்கள்.

கழனி வாரியம்—கோட்டவாரியம்—நீர் வாரியம்—கலங்க வாரியம்—பொன் வாரியம்—கணக்கு வாரியம்—பெருவழி வாரியம்—என்ற வகையிலே, பல வாரியங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

'இரிகேஷன்'—'ஹைவேஸ்' என்று இன்றையத் தினம் நாம் சொல்லுகின்றபோதுமு, 'வெள்ளையர் காலத்திலே கொண்டுவரப்பட்டது' என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

'உயிர்ச் சக்தி' இல்லாததற்குக்காரணம்?

சோழ மன்னர்கள் காலத்திலேயே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குழு...வாரியம் இவையெல்லாம் இருந்தன.

அதேவிதமான நிர்வாக அமைப்புக்கள் இன்றையத் தினம் இருந்தாலும் அன்றையத்தினம் இருந்த உயிர்ச்சக்தி இன்றையத் தினம் இல்லை.

அந்த உயிர்ச்சக்தி இன்றையத் தினம் இல்லாததற்குக் காரணம் அன்றையத்தினம் ஒரு கிராமத்திலேயே கிராம மக்கள் நிர்வாகத்திலே காட்டிவந்த அக்கறை, இன்றையத்தினம் கிராமத்திலே காட்டப்படுவதில்லை.

நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும்—இருபது, முப்பது வருடத்திற்கு முன்னாலே எங்கேயாவது ஒரு மதகு பழுதாகிவிட்டதென்றால், கலெக்டர் போக வேண்டுமென்றே அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லவேண்டுமென்றே இல்லாமல், அன்றையத்தினம் கிராம மக்களே குடிமராமத்து வேலைகளையெல்லாம் எல்லோரும் கூடிச் செய்தார்கள்.

எதற்கும் சர்க்கார்முடைய மானியங்கள்— உதவிகள்—கடன்கள் இவற்றை அடிப்படையாக வைத்தே எல்லாக் காரியங்களும் நடப்பது என்ற நிலை இன்று இருப்பதாலேதான், ஒரு மதகு சீர்படுத்தப்படவேண்டுமென்றால், 'அதை யார் வந்து பார்ப்பது' என்ற நிலையிலுள்ள இன்றையப் போக்கு இருக்கிறது!

இவற்றையெல்லாம் கிராம மக்கள் பார்த்து அக்கறை காட்டவேண்டும் என்ற உணர்ச்சியை ஊட்டவேண்டுமென்று உறுப்பினர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல பல காரியங்களை 'சீரணி' நிறைவேற்றும்

நிதி நிலை அறிக்கையின்போது நான் குறிப்பிட்டு சீரணியைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது அதைப் பற்றிப் பேசியவர்களில் சிலர், அதை 'சேங்கரவலர்' படையென்றே, அல்லது வேறு எந்தவிதமான படையென்றே ஜயப்படுகின்றத் தெரிவித்துக்கொண்டாலும், 'இந்த உணர்ச்சியை செயல்முறையிலே தூண்டுவதற்குத் தான் சீரணிப்படை பயன்படும்' என்ற கருத்தில்தான் தெரிவித்தேன்.

இந்தப் படை மாவட்டத்திற்கு மாவட்டம் அமைவது மட்டுமல்ல; எல்லாக் கிராமங்களிலும்—கிராமத்திற்குக் கிராமம் அமைக்கப்படலாம், பல நல்ல காரியங்களை நிறைவேற்றும் என்று நான் கருதுகிறேன்.

சீரணிப் படையாலோ அல்லது கிராமத் தொண்டர்களாலோ நிறைவேற்றப்பட முடியாதவை—கடினமானவை—கிர்வாக நிபுணத்துவம் தேவைப்படுகிறகாரியங்கள் எல்லாம் அரசுக்குத்தான் வந்தாக வேண்டும். அரசு அவற்றிலே தலையிடுவதிலே எந்தவிதமான நியாயக்குறைவும் இல்லை. சில பணிகளில் கட்டாயமாக அரசு தலையிட்டே தீரவேண்டும்.

ஒன்றுபட்டுச் செயலாற்றினால்தான்..!

கனம் உறுப்பினர்கள் அனைவரும் பொது உணர்ச்சியை—இருபது முப்பது ஆண்டுகட்கு முன்னாலே இருந்த உணர்ச்சியை மறுபடியும் மக்களிடத்திலேஉண்டாக்க வேண்டும். அப்படி உண்டாக்க வேண்டுமானால் எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாவட்ட அபிவிருத்திக் குழு பற்றிப் பலர் பேசும்பொழுது நான் மிகுந்த கவனத்தோடு கேட்டுக் கொண்டு இருந்தேன்; ஏனென்றால், இது, நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ள பிரச்சினை.

"ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு பஞ்சாயத்து இருந்தே தீரவேண்டும்; இதுதான் அரசு தருகின்ற பெரிய சலுகை; 'சுயராஜ்யத்'தை அவரவர் வீட்டுவாசலில் கொண்டுபோய்ச் சேர்ப்பது; ஆகவே, பஞ்சாயத்துக்களை எல்லாக் கிராமங்களிலும் உண்டாக்கவேண்டும்" என்று உண்டாக்கினார்கள்.

பல பஞ்சாயத்துக்கள், சிறிய கிராமங்களிலே இருப்பதால், அங்கே வருவின்று வருவாயை வைத்துக் கொண்டு பஞ்சாயத்துக்குச் செய்யப்பட வேண்டிய காரியங்களை எல்லாம் செய்வதற்கு வாய்ப்புக்கள் இல்லை—வசதிகள் இல்லை.

எதிர்க் கட்சித் தலைவர் பேசும்பொழுது, 'சிறிய கிராமங்களெல்லாம் வருவாய் அடிப்படையிலே திருத்தியமைக்க வேண்டும்' என்றார். அப்படித் திருத்தியமைக்க வேண்டுமெனறு அரசு முன்வருகின்றபொழுது, 'எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து அது செய்யப்பட வேண்டும்' என ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அரசை நடத்துகின்ற எந்தக் கட்சியும் அதைத் துணிந்து செய்யும்.

எதிர்க் கட்சித் தலைவர் இங்கே சொல்வதுபோல், 5,000 பஞ்சாயத்துக்களைத் திருத்தியமைத்து 3,000 பஞ்சாயத்துக்களாகக் குறைத்தவுடன், மாலையிலே அவர் — காங்கிரசுத் தலைவர் என்ற முறையில் — மேடையிலே, 'எங்கள் காலத்திலே கிராமங்களுக்குச் சுயராஜ்யம் இருந்தது; இவர்கள் வந்தவுடன், 'பாரந்தீர்களா? 5,000 பஞ்சாயத்துக்கள் 3,000 பஞ்சாயத்துக்களாக ஆக்கிவிட்டார்கள்; குறைக்கப்பட்ட 2,000 பஞ்சாயத்துக்களும் காங்கிரசுக் காரர் பஞ்சாயத்துக்கள்' என்று பேசக்கூடிய நிலை இருக்காது. இல்லையென்றால், எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து, 'இதைத் திருத்தியமைக்க வேண்டுமென்பதிலே ஒன்றுபட்டு இருக்கிறோம்; இதிலே கட்சிப் பிரச்சினைக்கோ, கட்சி மாச்சரியத்திற்கோ இடமில்லை; அப்படிப்பட்ட முறையில் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம்' என்று ஒருவருக்கொருவர் தெளிவாகப் புரிந்துகொண்டு, பின்னர், 'நிர்வாகம் சரியாக இல்லை' என்றெல்லாம் சொல்லாமல், ஒருமைபபாட்டு உளத்தோடு காரியங்களைச் செய்யலாம்.

நிர்வாகத் திருத்தங்கள் செய்யாதற்குக் காரணம்?

அரசியல் கட்சிகளிலே இருக்கின்றவர்கள், சில சமயங்களிலே சில காரியங்களைச் செய்ய விட்டுவிட்டு, பின்னாலே குறை சொல்கின்றபழக்கமும் உண்டு; சில காரியங்களைச் செய்ய விடாமல் தடுத்து, பின்னாலே, 'செய்ய

(4-ம்பக்கம் பார்க்க)

சென்னை — வண்ணையில்

ஒரே வீட்டில் மூன்று முறை தீப்பற்றியது!

சென்னை, சூலை 15—வண்ணைப் பகுதி 21-வது வட்டத்தில் (ஆறுமி ரெங்கையன் தெரு), மாரி என்பவரின் வீடு இன்று பிற்பகல் 1-30 மணிக்கு திடீரெனத் தீப்பற்றி எரிந்து; உடனே என். எஸ். கே. நினைவு மன்றத் தலைவர் எஸ். சீனிவாசன், வட்டச் செயலாளர் கே. எம். தீனதயாளன், கழக உறுப்பினர்கள் எம். மணி, முழுசாமி, இராசவன் ஆகியோரும் பொதுமக்களும் உடனிருந்து தீயை அணைத்தனர்.

ஏற்கனவே 13—7—67 காலையிலும், அன்று பிற்பகல் 2-30 மணியளவிலும் இதே வீடு தீப்பற்றிய செய்தி வெளியாகியுள்ளது.

முந்திய அரசு...

கடலைப்பருப்பு வாங்கியதில் ஏற்பட இருந்த நட்டம்

தக்கநேரத்தில் புதிய அரசால் தவிர்க்கப்பட்டது

சென்னை, சூலை 17—"நமது மாநிலத்துக்கு ஊர்ந்து ஓராண்டுக்கு 60,000 டன் தேவை; ஆனால் இங்கே உற்பத்தியாவது 10,000 டன்தான். பச்சைப் பயறு 85,000 டன் தேவைப்படுகிறது; கொண்டைக் கடலை 1,50,000 டனனும், கடலைப் பருப்பு 1,00,000 டனனும் தேவைப்படுகிறது; இதை இங்கு பயிரிடுவதே இல்லை. எனவே, நமக்குத் தேவைப்படும் பருப்பு வகைகளை வட மாநிலங்களிலிருந்துதான் தருவித்தாக வேண்டும்"

என்று, உணவுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் விளக்கினார்.

கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"1965-ல் ஒரு குவிண்டால் ரூ. 70-க்கு அரசு கடலையை வாங்கியது. 1966-ல் ரூ. 94-க்கு உணவுக் கார்ப்பரேஷன்மூலம் வாங்கப்பட்டது. 1967-ல் குவிண்டால் ரூ. 100-க்கு வாங்கப்பட்டது. இந்தக் கடலையை அதிக விலைக்கு விற்றதற்குக் காரணம் சொல்லவேண்டியது முந்திய அரசுதான் என்றாலும், அதனை இப்போது இந்த அரசு தெரிவிக்கவேண்டிய நிலையில் உள்ளது.

"வெளிச்சந்தையில் விலையேறியிருந்ததாலும், நமது மாநிலத்தில் பற்றுக்குறை நிலவியதாலும், விலைகள் ஒருநிலைப்படுத்தவேண்டும் என்பதாலும், கொஞ்சம் கூடுதலான விலைக்கு விற்க சேர்ந்தது; இருப்பினும், உ. பி. மாநிலத்திலேயேகூட இன்று குவிண்டால் இறுநூறு ரூபாயைத் தாண்டிக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இந்த அரசு பொறுப்பேற்ற போது, முந்திய அரசு வாங்கி இருப்பு வைத்திருந்த கடலைப் பருப்பு, உளுத்துப்போன நிலையில்—விற்பனைக்குப் பயன்படாத நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது. அது மேலும் அப்படியே இருந்தால், உருளைக்கிழங்கு நேர்ந்ததை கதைபோல் ஆகிவிடும் என்று கருதி, அதை குவிண்டால் ரூ. 110-க்கு விற்க இந்த அரசு கடவுக்கை எடுத்தது. அந்தப் பருப்பு குவிண்டால் ரூ. 80-க்குத்தான் வாங்கப்பட்டது. இந்த வகையில், ரூ. 22 இலட்சம் வரை ஏற்பட இருந்த நட்டத்தைத் தவிர்த்திருக்கிறது —இந்த அரசு."

பொருள் மாறவில்லை--மொழிதான் மாறியது

வள்ளுவர் கருத்தின்படி 'வாய்மை'யே பொருத்தம்

அரசுச் சின்னத்தில் தமிழ்க் கொள்கை உரை--காங்கிரசார் கேள்விக்கு--முதலமைச்சர் அண்ணா இரா. நெடுஞ்செழியன் பதில்

சென்னை, ஜூலை 19—"மாநில அரசின் சின்னத்தில், 'சத்தியமேவ ஜெயதே' என்றிருந்த சொற்றொடர் எந்த உரிமையில்—எந்த விதிகளின்கீழ், 'வாய்மையே வெல்லும்' என்று தமிழில் மாற்றப்பட்டது ?"

என்று காங்கிரசு உறுப்பினர் திரு. கே. விநாயகம் சட்டமன்றத்தில் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பின் வருமாறு பதிலளித்தார்கள் :—

"தமிழக அரசின் சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ள 'சத்தியமேவ ஜெயதே' என்னும் கொள்கை உரையை அரசு மாற்றவில்லை.

'வாய்மையே வெல்லும்' என்னும் கொள்கை உரை, தேவநாகரி எழுத்தில் உள்ள 'சத்தியமேவ ஜெயதே' என்பதற்கு நிகரான தமிழாக்கம் ஆகும்.

தமிழ் தவிர ஏனைய மொழி அறியாத இமாலய மக்கள் பலர், இதன் விழுமிய பொருளை மேலும் சிறக்க உணர்ந்து கொள்ளவேண்டும் என்னும் ஆர்வக் குறிப்பாலும் 'ஆட்சி மொழியாம் தமிழை விரைந்து கையாள வேண்டும்' என்னும் கோட்பாட்டுக்கு இணங்கவும் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது."

கே. விநாயகம் :—"எனக்குத் தமிழிலே புலமை இல்லை என்றாலும், 'வாய்மையே வெல்லும்' என்றிருப்பதைவிட, 'உண்மையே வெல்லும்' என்பதுதான் சரியான மொழி பெயர்ப்பு என்று சொல்லப்படுகிறதே—இது அரசுக்குத் தெரியுமா ?"

அண்ணா :—"தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் நல்ல புலமை மிக்கவர் இராஜாஜி—என்பதை, இம்மன்றம் ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறேன். அவரே, 'வாய்மையே வெல்லும் என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பு' என்று ஒப்பமிட்டு எழுதியுள்ளார். நண்பர் விஞயகம் அவர்கள், தமது கேள்வியின் முதற் பகுதியிலேயே தமக்குத் தமிழில் புலமை இல்லை என்பதைத் தெரிவித்துவிட்டார். இராஜாஜியின் தமிழ் — வட மொழிப் புலமை பற்றி நானும் ஓரளவு உணர்ந்திருக்கிறேன். எனவே, விநாயகத்தின் கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை."

பி. ஜி. கருத்திருமன் :—"'வாய்மையே வெல்லும்' என்பதற்குப் பதில், 'சத்தியமே வெல்லும்' என்று இருக்கலாம். 'சத்தியம்' என்பது தமிழ்ச் சொல்தான். உண்மை—மெய்மை—வாய்மை—அநாவலு, மனம்—மொழி மெய்—சேர்ந்ததுதான் சத்தியம்; எனவே, வாய்மை என்பது சத்தியத்தின் முழுப் பொருள் ஆகாது என்பது தெரியுமா ?"

அண்ணா :—"'சத்தியம்' என்ற சொல் தமிழ் அல்ல; தமிழ் வரிவடிவத்தில் உள்ள வட மொழிச் சொல்லாகும்."

கே. விஞயகம் :—"'வாய்மை' என்பது வாயிலிருந்து வருவதாகும்; 'உண்மை', உள்ளத்திலிருந்து வருவதாகும்."

அண்ணா :—"வாயிலிருந்து வருவதெல்லாம் நல்லதாகத்தான் இருக்கும் என்பது தமிழர் நம்பிக்கை; 'வாயிலிருந்து எதுவும் வரும்' என்று விஞயகம் கருதுகிறார்போலும்! 'வாய்மை' என்பதற்கும்—சத்தியத்திற்கும் எந்த விதப் பொருள் வேறுபாடும் இல்லை."

இரா. நெடுஞ்செழியன் :—"'வாய்மை' எனப்படுவது யாதெனின், யாதொன்றும் தீமை இலாத சொலல்' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்; இதைத்தான் மதிப்பு வாய்ந்த நாம மெளிய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ளது. பிறருக்குத் தீமை பயக்காததைத்தான், 'வாய்மை' என்கிறோம். உண்மைக்கும்—வாய்மைக்கும் வேறுபாடு உண்டு; 'உண்மை' என்பது, உள்ள நிலையை அப்படியே எடுத்துக் கூறுவதாகும். அது தீமை பயப்பதாயினும், நன்மை பயப்பதாயினும் இருப்பதை இருக்கும்வாறு எடுத்துச் சொல்வதுதான் உண்மை; 'வாய்மை' என்பது அப்படியல்ல; தீமை பயக்காததையே வாய்மை என்கிறோம்.

ம. பொ. சிவஞானம் :—"இது குறித்து நான் எடுத்துச் சொல்ல இருந்தமை அமைச்சர் அவர்களே எடுத்துச் சொல்லிவிட்டார்கள். ஆக்கபூர்வமில் என்னுடைய மற்றொரு விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் சின்னத்தைச் சுற்றிப் பொறிக்கப்பட்டிருந்த சொற்றொடரை மாற்றியதேபோல், அரசின் சின்னத்தையும் கோபுரத்துக்குப் பதிலாக வில்—புலி—கயல் என்னும் தமிழ் மூவேந்தர் சின்னத்தைப் பொறிக்க அரசு முன்வருமா ?" (ஆரவாரம்)

இந்தக் கேள்விக்குவிடையளிக்க வில்லை.

அமைச்சர்கள் சம்பளம் வாங்குவது எப்போது ?

காங்கிரசு உறுப்பினர் காட்டும் அக்கறை

சென்னை, ஜூலை 18—"முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்கள் ஜாதியமோ, படிச் சிலவுகளோ பெறுவதில்லை என்று முடிவு செய்திருக்கின்றனரா ?"

என்று சட்டமன்றத்தில், காங்கிரசு உறுப்பினர் கே. விஞயகம் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'இல்லை' என விடையளித்தார்கள்.

கே. விஞயகம் :—"இல்லை என்றால், எப்போது வாங்கப் போகிறீர்கள் ?"

அண்ணா :—"சம்பளமோ வாங்கப் போவதில்லை என்று முடிவு செய்யவில்லை என்றுதான் பதிலளித்திருக்கிறேன்; அதற்குப் பொருள், 'இப்போது வாங்க வில்லை என்றால் எதிர்காலத்தில் வாங்கும் எண்ணம் உண்டு' என்பதுதான்."

கே. விஞயகம் :— "எப்போது வாங்கப் போகிறீர்கள்? 'விஞயகமே பரிவோடு கேட்கும்போது நாங்கள் வாங்காமல் இருப்போமா ?' என்று முதலமைச்சர் அண்ணா முன்பு சொன்னார்; ஆகவே, இப்போதாவது நாமெல்லோரும் சேர்ந்து சம்பளம் வாங்கலாமா ?"

அண்ணா :—"நண்பர் விஞயகம் காட்டும் பரிவுக்கு நன்றி; ஆனால், நாங்கள் சம்பளம் வாங்கவேண்டும் என்பதில் அவருக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்பதைத் தெரிந்துகொள்ளலாமா ? ஓர் அதிகாரி, தன்னுடன் பணியாற்றும் மற்றொரு அதிகாரியைப் பார்த்து, 'சம்பளம் வாங்கவில்லையா? வாருங்கள் — சம்பளம் வாங்க போவோம்' என்று பரிவோடு அழைத்தால், 'அவர் அந்த அதிகாரியிடம் கடன் கேட்கப் போகிறார்' என்பதுதான் பொருள்; அதைப்போல், விஞயகம் ஏதாவது கேட்கப் போகிறாரா ?"

கே. விஞயகம் :—"ஓர் ஒழுங்குப் பிரச்சினை; பொதுவாக உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்டு அமைச்சர்களிடமிருந்து பதிலைப் பெறுவதுதான் வழக்கம்; ஆனால், நம்முடைய முதலமைச்சரோ, பதில் கூறுவதற்குப் பதில், கேள்வி கேட்டவரிடமே மறு கேள்வி போடலாமா ?"

அண்ணா :—"ஆங்கில இலக்கணத்தில், கேள்விக்குக் கேள்வி வடிவிலேயே பதிலளிப்பதும் ஒரு முறை என்பதை கனம் விஞயகத்துக்கு நினைவுபடுத்துகிறேன்."

தூத்துக்குடி--சேலம் 'எழுச்சி நாள்'

கழக அமைப்புகளுக்கு பொதுச்செயலாளர் வேண்டுகோள்

அன்புடையீர் !

வணக்கம். சேலம் இரும்பாலை—தூத்துக்குடித்துறைமுகம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவதில் மத்திய அரசு காட்டும் அலட்சியப் போக்கைக் கண்டிக்கவும், தமிழகத்தின் பொருளாதாரச் செழிப்புக்கும் வளத்துக்கும் இந்த இரு திட்டங்களும் இன்றியமையாதவை ஆலுலும், அவைகளை நிறைவேறுவதற்கு உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற தமிழக மக்களின் ஒருமித்த எழுச்சிக் குரலை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, 'அவை எப்படியும் நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும்' என்பதை வலியுறுத்தவும், 1967 ஜூலைத் திங்கள் 28-ம் நாளை சேலம்—தூத்துக்குடித் திட்டங்களின் எழுச்சி நாளாகக் கொண்டு நாடெங்குமுள்ள தி. மு. கழக அமைப்புகள் அனைத்தும் அன்று பொதுக்கூட்டங்கள் வாயிலாக அத்திட்டங்கள் சம்பந்தமான தற்போதைய நிலையை விளக்கியும், அவை சம்பந்தமாக எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளின் அவசிய அவசரத்தை மத்திய அரசுக்கு உணர்த்தியும் நாம் செயல்பட வேண்டும் என்று தலைமைக் கழகம் ஏற்கனவே அறிவித்துள்ளதைத் தோழர்கள் அறிவர்.

அதற்கேற்ப, 23—7—67 அன்று மாலை கழக அமைப்புகள் அனைத்தும் தத்தம் ஊர்தோறும் சொற்பொழிவாளர்களைக் கொண்டு பொதுக்கூட்டம் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

தி. மு. கழகச் சார்பில் நடத்தப்பெறும் எழுச்சி நாள் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கழகத்தின் சட்டமன்ற—பாராளுமன்ற கட்சிகள் அனைத்தும் கழகப் பொதுச் செயலாளர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கழகப் பொதுச்செயலாளரால் அழைப்பு அனுப்பப்பட்டு, எழுச்சி நாள் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டிய கட்சிகள் (1) முஸ்லிம் லீக்; (2) சுதந்திரக் கட்சி; (3) இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி; (4) வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி; (5) தமிழரசுக் கழகம்; (6) பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி; (7) சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி—ஆகியவை ஆகும்.

அந்தந்த நகரத்தில் அல்லது மாவட்டத்தில் உள்ள மேற்படி கட்சிகளின் அமைப்புகளை அணுகி, அந்தந்தக் கட்சிகளின் சார்பில் 23—7—67-ஆம் நாள் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டு, அந்தந்தக் கட்சிகளின் சார்பில் கலந்துகொள்வதாக ஒப்புதலுக்கும் தோழரின் பெயரையும் நன்கு விளம்பரப்படுத்திக் கூட்டத்தைச் சிறப்பிக்குமாறு கழக அமைப்புகளின் நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகம் அலட்சியமாக நடத்தப்பட்டிருப்பதையும், குறிப்பாக சேலம்—தூத்துக்குடித் திட்டங்களில் மத்திய அரசு நடந்துகொள்ளும் ஏமாற்றத்தும் போக்கினை விளக்கியும், இரு திட்டங்களும் நிறைவேற மத்திய அரசு உடன் செயல்முறை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று வற்புறுத்தியும் மட்டுமே 23—7—67-ம் நாள் கூட்டத்தில் பேசப்படுதல் வேண்டும் என்று தலைமைக் கழகம் விரும்புகிறது.

கூட்டத்தின் இறுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானத்தின் வாசகங்கள் கழக ஏடுகளில் வெளியிடப்படும். தீர்மானத்தை, கூட்டத் தலைவர் முன்மொழிந்து கூடியுள்ள மக்கள் அனைவரும் ஆமோதிக்கும் வகையில் நிறைவேற்றி அதன் படிகளை (பிரதிகளை)—(1) தலைமையமைச்சர் இந்திரா காந்தி; (2) மத்திய அரசு திட்ட அமைச்சர்; (3) திமுக முதலமைச்சர்; (4) அந்தந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்—ஆகியவர்களுக்கும், கழகத் தலைமை நிலையத்திற்கும் கூட்டம் முடிந்த மறுநாள் காலையே அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் தங்கள் மாவட்ட—வட்டங்களைச் சார்ந்த கழக அமைப்புகள் அனைத்தும், 23—7—67 எழுச்சிநாளைச் சிறப்புறக் கொண்டாடி பொதுக்கூட்டம் நடத்தும் வகையில் மாவட்ட—வட்டக் கழக அமைப்புகளின் நிர்வாகிகளும், தோழர்களும் அறிவித்து ஆவன செய்யுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை
பொதுச்செயலாளர் தி.மு.க.

அறிவகம், சென்னை-13
30—6—1967

நடக்க இருப்பவை

20--7--67

சென்னை 12-வது வட்டம்

தி.மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு பிடாரியார் கோயில் தெருவில் (பிராட்வே டாக்கீசுக்கு அருகில்); தலைவர்: லோ துரைசாமி; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., ந. இராமநாதசு, பி.ஏ. அந்தோணிமுத்து. (சிவகங்கை சேதுராசாவின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை 2-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு செயின்ட் சேவியர் தெருவில்; தலைவர்: தட்சணாமூர்த்தி; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், எம்.ஆர்.ஆர். வாசு, மு.வேதாசலம் எம்.எல்.ஏ., சே. அரசு. மற்றும் பலர்.

குழுக் கூட்டம்

"கரூர் நகர தி.மு.க. பிரதிநிதிகள்—உட்கிளைச் செயலாளர்கள் கூட்டம் 20—7—67 இரவு 8 மணிக்கு வட்டச் செயலாளர் ஆர்.என். இராமசாமி அவர்கள் கட்டிடத்தில் நடைபெறும்" என்று கரூர் நகரச் செயலாளர் என்.ஆர். இராமசாமி அறிவிக்கிறார்.

அம்பேத்கார் பிறந்த நாள் விழா

அறிஞர் அண்ணா பங்கேற்பு

சென்னை 62-வது வட்டம் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்—டாக்டர் அம்பேத்கார் இலவச இரவுப் பள்ளிச் சார்பில் அம்பேத்கார் பிறந்தநாள் விழா 20—7—67 மாலை 7 மணிக்கு பேரக்ஸ் ரோடில் (அரசினர் மருத்துவக் கிடங்கு அருகில்) நடைபெறும்; தலைவர்: ச. கன்னியப்பன் எம்.சி.; பேசுவோர்: அறிஞர் அண்ணா, அமைச்சர் சத்தியவாணிமுத்து, ஏ.பி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., க. ஆரியசங்கரன், மு. சுங்கூராஜு, ஆ.வே. பழனிசாமி எம்.ஏ., லத்தீப் பி.ஏ.,பி.எல்., மோ. திராவிடமணி.

தீ விபத்து நிவாரண நிதி வசூல் ஊர்வலம்

"திருவொற்றியூர் வள்ளுவர் சுற்றுலாக் குழுச் சார்பில் சென்னைத் தீவிபத்து உதவி நிதி வசூல் ஊர்வலம் 20—7—67 காலை 7 மணியளவில் திருவொற்றியூர் டோல் கேட்டிலிருந்து புறப்படும்" என்று மேற்படி குழுவின் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

தமிழ் மன்னர்கள்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விலங்கு' என்று குறை சொல்லுகின்ற பழக்கமும் உண்டு.

அரசை நடத்துகின்ற எந்தக் கட்சியும், அதிகமான அளவுக்கு இதனுலே எதிர்ப்புணர்ச்சிகள் வாராமல் இருக்குமா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பிலே இருக்கிறது.

நிர்வாகத்திலே திருத்தங்கள் செய்ய வேண்டுமெனறு எல்லோரும் சொன்னபோது, பல உறுப்பினர்கள், '15—20 ஆண்டுகளாகச் சொல்லிவருகிறோம்' என்று சொன்னார்கள்; அவர்கள் சொன்னது உடனுக்குடன் நடைபெறுமல் இருப்பதற்குக் காரணம், இதுதான் என்று கருதுகிறேன். காங்கிரசுக் கட்சியும் இதைச் செய்யாததற்குக் காரணம், 'செய்தால் அதை நாங்கள் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் செல்வாக்கைக் குறைத்துவிடுமோ' என்ற அச்சந்தான !

(தொடரும்)

சோஷிட் முன்னேற்றக் கழகத்திற்காக, இரா. இராமசாமி எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெங்கடேசுவரனும், அச்சிடுவோராகவும் கொண்டு அமுதம் அச்சகத்தில் (24, ஆரோக்கியமாதா கோயில் தெரு, சென்னை-15), சுயமரியாதை வெளியீடாக வெளியிடப்பட்டது.